முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி தை மாதம் 13ம் திகதி முதல் தை மாதம் 20ம் திகதி வரை**

**ஜனவரி 27ம் திகதி முதல் பிப்ரவரி 03ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** எதார்த்தம் சமத்துவம் சமாதானம்
எங்கும் கிராம மணமும் பலமும்
சதா தயவு சிந்தை மக்களை
சக்தியாக கொண்ட தமிழகமே

**2.** தமிழ் மரபுகளுடன் இயற்கை பலமும்
தன்னுள் வேற்றுமையில் ஒற்றுமை
நேமமுள தலைமைகளை கொண்ட
நீதிமான்களை தந்த பாரதமே

**3.** பாரதம் தமிழகம் தன்னில்
பாடிடுவேன் விளம்பி கலை திங்களில்
கூறவே முன்னான்கோர் திகதி மேல் இருபான் திகதி வரை
(விளம்பி வருடம் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 20ம் நாள் 03.02.2019, ஞாயிறு முடிய)
கூறிடுவேன் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலனை

**4.** பலனை சுப்பிரமணியர் யானும்
பாடிடுவேன் வார ஆசி தன்னை
கழனி காக்கும் தேசமே உலகில்
கந்தவேலன் என் அருளைப் பெறும்

**5.** பெருமைபட கழனி மக்களின்
பிரச்சனை களையும் அரசே
வறுமை இல்லாத ஆளுமையும்
வல்லமையும் பெற்று உயரும்

**6.** உயரும் தண்ணீர் பஞ்சமிலா
ஊழல் குற்றமில்லா மாறும்
தயவு மிக்க தலைமைகள் ஆக
தமிழகம் மாறி வளம் பெறும்

**7.** வளம் கூட மத்தியில் பலம் கூட
வரிச்சுமை நீக்கி மத்தியும்
பலமான நிர்வாகம் செய்தால்தான்
பாரதத்தில் வளர்ச்சி செய்ய முடியும்

8. முடிவுக்கு கழனி மக்களின்
முழு பிரச்சனையும் தீர்த்தால் தான்
விடிவான விசாலமான தரும ஆட்சி
விரிந்து மத்தி மாநில ஆளுமை

9. ஆளுமை பெருகும் வலுப்பெறும்
அல்லாது பகட்டான செயல்கள்
வலுவாக செய்து வந்தால்
வலுவிழந்து வளமிழந்தும் போக நேரும்

10. நேருமைபட தரும வழி காட்டும்
ஞானதேசிகன் வழி ஏற்கவே
தரும ஆட்சி ஞான ஆட்சி மலரும்
தாமுரைத்த வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :

விளம்பி வருடம் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 20ம் நாள் 06.02.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்

எதார்த்தமான இயல்புநிலை சமத்துவம் மிக்க மக்கள் சமாதானம் மிக்க குடிகளை கொண்டு கிராமிய மணமும் பலமும் கொண்டதும், எப்போதும் தயவு சிந்தையுடன் உள்ள நன்மக்களை தனது சக்தியாக பலமாக கொண்ட தமிழகத்திலும் பெருமைமிக்க தமிழ் மரபுகளையும் அதனோடு இணைந்த இயற்கை பலத்தையும் கொண்டதுடன் வேற்றுமை மிக்க பல மரபுகளையும், மாநிலங்களையும் மொழிகளையும் கொண்டபோதும் வேற்றுமையில் ஒற்றுமையில் அன்பும் நேசமும்மிக்க தலைமைகளை கொண்டதும் பலவாறாய் பண்புள்ள நீதிமான்களை தந்ததுமாகிய பாரத தேசமாகிய இந்தியாவிலும் விளம்பி வருடம் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 20ம் நாள் 03.02.2019 ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

உலகினில் எந்த தேசம் விவசாயிகளையும் விவசாய நிலங்களையும் பாதுகாக்கிறதோ அந்த தேசமே உலகினில் முருகப்பெருமான் எனது அருளைப் பெறுகின்ற தேசமாகும். விவசாய மக்களின் பிரச்சனைகளை களைந்து காக்கும் அரசே வறுமை இல்லாத ஆட்சியையும் சர்வ வல்லமையையும் பெற்று நிலை உயர்ந்திடும். அந்த தேசம் தண்ணீர் பஞ்சம் இல்லாத தேசமாக மாறும். ஊழல் எனும் குற்றமில்லாத நல்தேசமாக மாறிடும். அப்படிப்பட்ட தேசமாக தயவுமிக்க தலைமைகளை உடைய தேசமாக இந்த தமிழகம் மாறி வளம் பெற்று சிறக்கும்.

நாட்டின் வளம் பெருகிடவும், மத்திய அரசின் பலம் பெருகிடவும், மத்திய அரசு மக்களின் மீது போடும் வரிச் சுமைகளை குறைத்து பலம்மிக்க நிர்வாகத்தை செய்தால்தான் பாரத தேசம் வளர்ச்சி காண முடியும். விவசாய பெருங்குடி மக்களின் பிரச்சனைகள் முழுவதையும் தீர்த்தால்தான் நாட்டிற்கு விடிவு காலம் பிறக்கும். நாட்டினில் விசாலமான தர்மத்தின்ஆட்சியும் பரவலாக விரிந்து மத்திய அரசிலும் மாநில அரசிலும் ஆட்சி செய்வோர் வலிமை பெறுவார்கள்.

**அதைவிடுத்து பகட்டான விதத்தில் ஆடம்பரமான செயல்களை அதிகமாக ஆட்சி செய்வோர் செய்து வந்தால் ஆட்சி வலுவிழந்து நாடு வளம் இழந்தும் போக நேரிடும். நேர்மை மிக்க தர்மத்தின் வழியினை காட்டி ஞான வழியில் தர்மத்தின் வழியில் இவ்வுலகை வழிநடத்துகின்ற ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தர்மவழிகளை உலக மக்களும் ஆட்சிப்பொறுப்பில் உள்ளோரும் மனமார நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு செயல்பட்டால் நாட்டினில் தர்மத்தின் ஆட்சி மலரும், ஞான ஆட்சி மலரும் என தமது வார ஆசி நூல் மூலம் நாட்டினில் தருமஆட்சி நடக்க வழிவகை கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.**

**—சுபம்—**